பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 05 செவ்வாய்க்கிழமை 22.10.2024 கதிர் 349

## இனிது ரகசியம் அல்ல!

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான இரு அறிக்கைகளில் ஒன்றில் உள்ள விடயங்களில் சிலவற்றை உதய கம்மன்பில நேற்றுப் பகிரங்கப்படுத்தினார். ☞2

# சர்வதேசத் தொடர்புகளை எம்மாலும் வெற்றிகரமாக முன்னெடுக்கமுடியும்

### நிரூபிக்கப்பட்டுவிட்டது என்கிறார் ரில்வின் சில்வா

சர்வதேச தொடர்புகளை அரசு பலமானதாக முன்னெடுக்கிறது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி அதிகாரம் கிடைத்துள்ள நிலையில், அந்த அதிகாரத்தை முழுமைப்படுத்த வேண்டுமானால், எமக்கு நாடாளுமன்றப் பலத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.

நவம்பர் 14 நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில்,நாட்டுமக்களுக்குத் தொடர்ந்து பதில் சொல்லவேண்டிய, பொறுப்புக்கூறவேண்டிய தேசிய மக்கள் சக்திக்கு, பெருமளவான உறுப்பினர்களை நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்து அனுப்புவது காலத்தின் கட்டாயமாகும்

76 வருடகாலமாக நாட்டில் ஒரே தரப்பினர் அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டு நாட்டு மக்களை வீழ்த்தினர். நாட்டை விற்பதே அவர்களது நோக்கமாகும். மக்கள் நிதியைகொள்ளையடித்தனர். மோசமான அரசியல் கலாசாரத்தை உருவாக்கினர். அதனைமாற்றியமைப்பதற்கானவாய்ப்பு தற்போது எமக்கு கிடைத்துள்ளது.

நாம் ஜனாதிபதித் தேர்தலை வெற்றி கொண்டதுபோல, நாடாளுமன்றத் தேர்தலையும் வெற்றி கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டியுள்ளது.

ஜனாதிபதி நாட்டை பொறுப்பேற்று மூன்று வாரங்களே ஆகும் நிலையில், அரசியல் கலாசாரத்தில் பெரும் மாற்றங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. நாம் ☞2

# 21 ஆயிரம் விண்ணப்பங்கள் நிராகரிப்பு

இந்த ஆண்டு பொதுத்தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட தபால் வாக்களிப்பு விண்ணப்பங்களில் 21,160 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

7 இலட்சத்து 59 ஆயிரத்து 210 தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க ☞8

# சிறீரங்காவைக் கைதுசெய்ய கொழும்பு பொலிஸார் முயற்சி

### நீதிமன்றத்திற்கும் அறிவிப்பு

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு அவதூறு ஏற்படும் வகையில் கொழும்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேகநபராக அடையாளம் காணப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ☞2

# பொது ஒழுங்கைப் பேணுவதற்கு பாதுகாப்பு படைகள் தேவையா?

### மனித உரிமைகள் ஆணைக்குழு கரிசனை

நாட்டில் பொது ஒழுங்கைப் பேணுவதற்காக இராணுவத்தினர், கடற்படையினர் மற்றும் விமானப்படையினருக்கு அழைப்புவிடுக்கும் வகையில், ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது கரிசனையை வெளிப்படுத்தியுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ☞2

# நாடாளுமன்றத் தேர்தலுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு

## வாக்களிப்பு திகதியில் தவறு என வாதம்

**நாடாளுமன்றத் தேர்தலை நவம்பர் 14 நடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் அரசமைப்பிற்கு முரணானது என்று தீர்ப்பு வழங்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

**தேர்தல் சட்டங்களின் விதிமுறைகளுக்கு முரணாகவே, பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்றும் வாக்கெடுப்பை நடத்துவதற்கான தினம் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து குறித்த மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.**

**சிவில் அமைப்பு செயற்பாட்டாளர் ஒருவர், 'நாம் ஸ்ரீ லங்கா தேசிய அமைப்பின்' ஏற்பாட்டாளர் எச்.எம்.பிரியந்த ஹேரத் ஆகியோர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.**

**மனுவின் பிரதிவாதிகளாக ஜனாதிபதியின் சார்பில் சட்ட மாஅதிபர், ஜனாதிபதி செயலாளர், தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள்,** ☞2

# நடிகை தமிதா கட்சி தாவினார்

பிரபல நடிகை தமிதா அபேரத்ன ஜனநாயக தேசிய கூட்டமைப்பில் இணைந்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் ☞2

# சியராலியோனின் ஜனாதிபதி வருகை

மேற்கு ஆபிரிக்க நாடான சியராலியோனின் ஜனாதிபதி ஜூலியஸ் மடா பயோ, இலங்கைக்கு வந்திருந்தார்.

சமோவாவில் நடைபெறவுள்ள ☞2

# பாதுகாப்பு செயலரோடு ஆஸி. அதிகாரி சந்திப்பு

கேர்ணல் லாரா தெரேஸ் ட்ராய் தலைமையிலான ஆஸ்திரேலிய பாதுகாப்பு மற்றும் மூலோபாய ஆய்வுகள் பாடநெறி தூதுக்குழு பாதுகாப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தாவை (ஓய்வு) நேற்று கோட்டை ஸ்ரீ ஜயவர்தனபுரவில் உள்ள பாதுகாப்பு தலைமையக வளாகத்தில் சந்தித்தது.

வரவேற்பை தொடர்ந்து, பாதுகாப்புச் செயலாளர் அவுஸ்திரேலியப் பிரதிநிதிகளுடன் சுமுகமாக கலந்துரையாடினார். பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு ☞2



# ஜனாதிபதிக்கு பெரும் சவால்

### செஹான் சேமசிங்க சுட்டிக்காட்டு

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசு எட்டியுள்ள இணக்கப்பாடுகளுக்குப் பாதிப்பில்லாமல், ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவது பெரும் சவால் என்று முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் ☞2

# தடை உத்தரவு நீடிப்பு

கடந்த ஆட்சியில் பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான உதவி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான முயற்சிகளை தடுக்கும் வகையில் நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் நியமனங்களைச் சவாலுக்கு உட்படுத்தி பதுளை பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவரினால் தாக்கல் செய்யப்பட்ட மனு மேன்முறையீட்டு நீதிமன்றில் இன்று விசாரணைக்கு ☞2

# ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி அதிகூடிய ஆசனங்களை வெல்லும்

### சிவசக்தி ஆனந்தனின் நம்பிக்கை இது

2024 நாடாளுமன்றத் தேர்தலில் தமது ஜனநாயகத் தமிழ்தேசியக்கூட்டணி அதிகூடிய ஆசனங்களை வடக்கு கிழக்கில் வெல்லும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று மாலை செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு வடக்கு கிழக்கில் இம்முறை போட்டியிடுகின்ற மிகப் பலமான கூட்டணியாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி உள்ளது. இத்தேர்தலில் எமது கூட்டணி அதிகூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களை வெற்றிகொள்ளும்.

தமிழ் மக்களுக்கு கடந்த 75 வருடங்களாக ஒரு தேசிய இனப்பிரச்சினை காணப்படுகின்றது. தேசிய இனப் பிரச்சினைக்காக பலவருடங்களாக அகிம்சை ரீதியாகவும், ஜனநாயக ரீதியாகவும் தமிழ் மக்கள் போராடி உள்ளனர். இதனால் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளனர். தமிழ் மக்களின் தேசிய பிரச்சினையை முன் நிறுத்தி நாங்கள் ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஆளும்தரப்பை சங்கடத்திற்குள்ளாக்கும் வகையில், அதனால் புதிதாக நியமனம் செய்யப்பட்ட இருவரை இலக்கு வைத்து அவரது அறிக்கை விவரங்கள் இருந்தன.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள ஷானி ஆகியோரைக் குறிவைத்து அவரது அறிக்கை விவரங்கள் இருந்தன. இந்த இரு அதிகாரிகளும் கோட்டாபய காலத்தில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானவர்கள் என்று நாடே அறிந்த நிலையில், அவர்கள்தான் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிகள் என்ற வகையில் திரிக்க முற்பட்ட கம்மன்பிலவின் வெளிப்படுத்தல் எதிர்பார்க்கப்பட்ட பரபரப்பை ஏற்படுத்தவில்லை.

இந்த அறிக்கைகளை ஏற்க முடியாது, இவை எல்லாம் முன்னைய ஆளும்தரப்பின் தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட அறிக்கைகள் என்று புறம்தள்ளிவிட்டார் பேராயர் மல்கம் ரஞ்சித். தற்போதைய ஆளும் தரப்பு சுயாதீனமான விசாரணையை முன்னெடுத்து உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவேண்டும், அதற்கிடையில் கம்மன்பில மாதிரியான சில அரசியல்வாதிகள் இந்த விவகாரத்தைப் பயன்படுத்திக்கொள்ளப் பார்க்கிறார்கள் என்பதே கர்தினாலின் நிலைப்பாடு.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஜேவிபி ஆட்சியில் மேற்கொள்ளப்படவுள்ள விசாரணைகளுக்கு தற்போது குற்றஞ்சாட்டப்படும் அதிகாரிகள் இருவருமே முதன்மையானவர்களாக இருப்பார்கள். அந்த நிலையில், முன்னைய ஆட்சியாளர்களின் அடி ஆழம் வரை சென்று உண்மையை இழுத்தெடுக்க அவர்கள் தயங்கமாட்டார்கள் என்கிற அச்சம் காரணமாகவே கம்மன்பில அவசரமாகத் துள்ளிக் குதிக்கிறார் என்கிறார்கள் விடயமறிந்தவர்கள். பார்ப்போம் என்ன நடக்கின்றது என்று.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைக் கடந்து தமிழ் இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் குறித்தும் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளதல்லவா தற்போதைய ஆளும்தரப்பு. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான உண்மையைக் கொண்டு வருவார்களாக அல்லது வழக்கம்போல அரசியல் பழிவாங்கல்தானா என்பது இதில் தெரிந்துவிட்டால், அடுத்ததற்கு என்ன நடக்கும் என்பதும் தெளிவாகிவிடும் அல்லவா?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நாடாளுமன்றத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தல் வாக்கெடுப்பை நடத்துவதற்கான சட்டத்தின் 10ஆவது பிரிவிற்கு அமைய வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வதற்காக ஒக்டோபர் 4 முதல் 11 வரை திகதி குறிக்கப்பட்டதாக மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் சட்டத்திற்கு அமைய வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட இறுதி தினத்திலிருந்து 5 வாரங்களுக்கு குறையாத காலம் மற்றும் 7 வாரங்களுக்கு மேற்படாத காலத்திற்குள் வாக்கெடுப்பிற்கான திகதி குறிக்கப்பட வேண்டும் என மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை நிறைவடைந்த ஒக்டோபர் 11 முதல் 5 வார காலம் நவம்பர் 15 நிறைவடைவதுடன், 7 வார காலம் நவம்பர் 29 நிறைவடைவதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் திருத்தச் சட்டத்திற்கு அமைய தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொண்ட பின்னர், தேர்தலை நடத்துவதற்கான சரியான காலப்பகுதியாக நவம்பர் 15 முதல் 29 வரையான காலப்பகுதியே காணப்படுவதாக சுட்டிக்காட்டி காட்டியுள்ள மனுதாரர்கள், ஜனாதிபதியால் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் முழுமையாக சட்டத்திற்கு புறம்பானது எனவும் அது சட்டவாட்சியை மீறும் செயல் எனவும் வாதிட்டுள்ளனர்.

இதற்கமைய, ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவினால் பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்வதற்கும் வாக்கெடுப்பை நடத்துவதற்கும் திகதி குறித்து வெளியிடப்பட்ட வர்த்தமானியில் காணப்படும் பிழையை சீர்செய்வதற்குப் பொருத்தமான உத்தரைவ பிறப்பிக்குமாறு மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

## நடிகை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்ட முரண்பாடே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

இந்த ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிட அவர் பரிந்துரைக்கப்பட்டார். எனினும், தனது பெயர் கடைசி நேரத்தில் நீக்கப்பட்டதாக தமிதா அபேரத்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

இதனையடுத்து அவர் கட்சியின் அனைத்து பதவிகளில் இருந்தும் விலகினார்.

## சியராலியோனின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகச் செல்லும் சியரா லியோனின் ஜனாதிபதி ஜுலியஸ், நேற்றிரவு நாட்டுக்கு வருகை தந்துள்ளதுடன், அந்த மாநாட்டுக்கு புறப்பட்டுச் செல்லவிருந்தார் என்று அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்தது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் தலைமையில், புதிய ஆளும்தரப்பு நாட்டில் ஆட்சி அமைத்துள்ள நிலையில், இலங்கைக்கு வருகை தரும் முதல் வெளிநாட்டு ஜனாதிபதி ஜுலியஸ் மடா பயோ ஆவார்.

இவர், அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். எனினும், இலங்கைக்கான இவரது இந்த வருகை தனிப்பட்ட பயணம் என்பதால், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்திக்க மாட்டார் என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

## பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரி எயார் வைஸ் மார்ஷல் பத்மன் டி கோஸ்தா மற்றும் இலனங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்திற்கான பாதுகாப்பு ஆலோசகர் கேணல் அமண்டா ஜோன்ஸ்டன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, அவுஸ்திரேலிய தூதுக்குழுவினர் பாதுகாப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் பாதுகாப்பு அமைச்சின் உதவி இராணுவ இணைப்பு அதிகாரி (இலங்கை இராணுவம்) கேர்ணல் பிரியங்க ஜயசூரியவுடன் ஒரு தகவல் பரிமாற்ற அமர்விலும் பங்குகொண்டனர்.

## தடை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துக் கொள்ளப்பட்டபோது இந்தத் தடை உத்தரவு நீடிக்கப்பட்டது.

இதன்படி, குறித்த இடைக்காலத் தடை உத்தரவு 2025ஆம் ஆண்டு ஜனவரி 27 வரை நீடிக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான உதவி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை ஜூன் 14 நடைபெறவுள்ளதாகவும், தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படும் எனவும் கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளரினால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், தொழில் ரீதியான தொண்டர் ஆசிரியராகப் பணியாற்றும் தாம், உதவி ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தனர் எனவும், இலங்கை ஆசிரியர் சேவை ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு முரணாக இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

## ஜனநாயக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு கிழக்கில் எமது வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது நாங்கள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி இருந்தோம். மிகக் குறுகிய காலத்தில் 2 லட்சத்து 25 ஆயிரம் மக்கள் எமக்கு வாக்களித்து உள்ளனர். இந்த நாடாளுமன்றத் தேர்தலில் இரட்டிப்பான ஆதரவை தமிழ் மக்கள் எங்களுக்கு வழங்குவார்கள்.

இந்த தேர்தல் காலத்திலே ஆளும்தரப்பு தமிழ் மக்களுக்கு தேசிய இனப்பிரச்சினை இல்லை என்பதைக் கூறிகொண்டி- ருக்கின்றது. ஆளும் தரப்புக்கு ஆதரவான அதேநிலைப்பாட்டில் வடக்கு கிழக்கில் போட்டியிடுகின்ற பல அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்கள் இத் தேர்தல் களத்தில் செயல்பட்டு வருகின்றன.

அதனால் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியை பலப்படுத்த வேண்டிய தேவைப்பாடு மக்களுக்கு உள்ளது. மக்கள் எங்களுக்கு இரட்டிப்பு ஆதரவு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது என்றார்.

# கம்பஹா மாவட்டத்தில் நீர் விநியோக தடங்கல்

நீர் விநியோக பாதையில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாக கம்பஹா மாவட்டத்தின் பல பகுதிகளுக்கு இன்று நண்பகல் 12 மணி வரை குறைந்த அழுத்தத்திலேயே நீர் விநியோகம் இடம்பெறும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதன்படி வத்தளை, மாபோல, ஜா அல மற்றும் கட்டுநாயக்க-சீதுவ நகரசபை பகுதிகளுக்கும் வத்தளை, பயகம, மஹர, ஜா அல, கட்டான மற்றும் மினுவாங்கொட உள்ளூராட்சி சபை பகுதிகளுக்கும் குறைந்த அழுத்தத்தில் நீர் விநியோகம் செய்யப்படும்.

இதன் காரணமாக அதிக இடங்களில் நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

## சிறீரங்காவைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீரங்காவை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக கொழும்பு பிரதம நீதவான் திலின கமகேவிடம் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் நேற்று அறிவித்தனர்.

பிரதான சந்தேகநபர் தற்போது வீட்டில் இல்லாத நிலையில் அவரைதேடி விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக அதிகாரிகள் நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தினர்.

தமது கட்சிக்காரர்கள் இந்த வழக்கின் சாட்சியாளர்களாகவே உள்ளனர் என்று இந்த சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

சாட்சியாளர்களை இவ்வாறு விளக்கமறியலில் வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் பொலிஸார் வழக்கு தொடர்பாக மேலதிக விசாரணைகளை நடத்த முடியாத நிலை உருவாகும் என ஜனாதிபதி சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

வாதங்களை ஆராய்ந்த நீதிவான், சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 8 சந்தேகநபர்களில் நால்வரை மாத்திரம் பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிட்டார்.

ஏனைய சந்தேகநபர்கள் நால்வரையும் எதிர்வரும் நவம்பர் 4 வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

## பொது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவுகோல்களுக்குப் புறம்பாகப் பிறப்பிக்கப்படக்கூடிய இத்தகைய கட்டளைகளால் மனித உரிமைகள் பாதுகாப்பில் எதிர்மறையான தாக்கம் ஏற்படக்கூடும் என அந்த ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12ஆவது பிரிவின் கீழ் 2024 செப்டெம்பர் 26ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட 2403/47ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக முன்னைய ஆளும்தரப்பால் பிறப்பிக்கப்பட்ட இக்கட்டளை மாதாந்தம் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

செப்டெம்பர் 24 முதல் ஒரு மாதகாலத்துக்கு இலங்கையின் ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலும் பொது ஒழுங்கைப் பேணுவதற்காக இலங்கை இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையின் அனைத்து உறுப்பினர்களும் அழைக்கப்பட்டுள் ளனர்.

இதுகுறித்து, தமது கரிசனையை வெளிப்படுத்தியுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் உயர்நீதிமன்ற நீதியரசர் (ஓய்வுபெற்ற) எல்.ரீ.பி.தெஹிதெனிய, ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சர்வதேசத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றியைக் கொண்டாடுவதற்கு கண்காட்சிகளை நடத்தவில்லை. ஜனாதிபதியின் பதவியேற்பும் மிக எளிமையாகவே நடைபெற்றது.

நாடாளுமன்றத் தேர்தலை வெற்றி கொள்வது எமக்கு மிகவும் எளிதானது. தோல்வியுற்ற குழு இப்போதே வீழ்ச்சி கண்டுவிட்டது. அவர்கள் தமது தோல்வியை இப்போதே ஏற்றுக்கொண்டு விட்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி என எம்மை குறை கூறியவர்கள் இப்போது எங்கே? எம்மால் வெளிநாட்டு தொடர்புகளை முன்னெடுக்க முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியினர் தெரிவித்தனர். இன்று என்ன நடந்துள்ளது?

உலகிலுள்ள அரச தலைவர்கள் மற்றும் இராஜதந்திரிகள் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை சந்தித்து வருகின்றனர். உதவி ஒத்துழைப்புகளையும் வழங்கி வருகின்றனர். சர்வதேசத்தோடு முன்னேற்றகரமான தொடர்புகளை மேற்கொள்ள முடியும் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

## 21 ஆயிரம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட தபால்மூல வாக்களிப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை 7 இலட்சத்து 38 ஆயிரத்து 50 ஆகும். தபால் மூல வாக்குகளை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்குப்பதிவுக்கான வாக்குச்சீட்டு விநியோகம் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது;

2022ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மூலம் நிகழ்ந்த சமூக, அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான எமது ஆளும்தரப்பு மிகமிவும் அர்ப்பணிப்புடன் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கையை ஆரம்பித்தோம். அந்த நடவடிக்கை மிகவும் கடினமானதாகும்.

செப்டெம்பர் 21 முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தேர்தலில் தோல்வியடைவதற்கு காரணமாக அமைந்ததும் வீழ்ச்சியடைந்திருந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்பி, பொருளாதார பரிமாற்றத்தை ஏற்படுத்துவதற்கு மேற்கொண்ட மிகவும் கடினமான தீர்மானங்களேயாகும்.

அரசியல்வாதிகள் யாரும் எடுக்க முடியாத, மக்களுக்கு துன்பங்கள் தரும் தீர்மானங்களை எடுக்க வேண்டி ஏற்பட்டது. அதனால்தான் இன்று பொருளாதாரம் ஒரு உறுதியான நிலைக்கு வந்துள்ளது.

2021, 2022 காலப்பகுதியில் நாட்டின் அரச வருமானம் நூற்றுக்கு 8 வீத அளவிலேயே இருந்தது. என்றாலும் 2024ஆகும்போது நாட்டின் வருமானத்தை நூற்றுக்கு 13. 1 வீதமாக அதிகரிக்கவேண்டி இருந்தது. எமது பொருளாதார திட்டமிடல் மூலம் அதனை அடைவது எமக்குப் பெரும் சவாலாக இருக்கவில்லை. அதேபோன்று பணவீக்கம் 2022 செப்டெம்பர் மாதம் நூற்றுக்கு 70 என்ற எல்லைக்கு நெருங்கி இருந்தது.

அந்நிய செலாவனி 20 மில்லியன்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு குறித்து அரசிடம் தெளிவான கொள்கை இல்லை

## சாகல ரத்நாயக்க குற்றச்சாட்;டு




சர்வதேசநாணயநிதியத்துடனான இணக்கப்பாடு தொடர்பில் அரசாங்கத்திடம் தெளிவான கொள்கை இல்லை. ஜனாதிபதி உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தியினர் நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மாற்றுவதாக தெரிவித்துவரும் நிலையில், நாணய நிதியத்தின் இணக்கப்பாடுகளை அவ்வாறே முன்னெடுத்து செல்வதாக அரசாங்கம் சர்வதேசத்துக்கு தெரிவித்துள்ளது என புதிய ஜனநாயக முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளரும் ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளருமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

புதியஜனநாயகமுன்னணிகொழும்பில்நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டபோது, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி கடன் உதவிகளை பெற்றுக்கொள்ளவும் எமக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் கலந்துரையாடி கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்திருந்தது. அந்த நடவடிக்கைகள் அனைத்தும்கடந்தமாதம்செப்ரெம்பர்மாதத்துடன் இரு தரப்பு இணக்கப்பாடுகளுடன் பூரணப்படுத்தப்பட்டன.

என்றாலும் எமக்கு தனிப்பட்ட ரீதியில் கடன் வழங்கிஇருந்தஎமில்டன்ரிசவ்வங்கி, இலங்கைக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது. குறித்த வழக்கில், பெற்றுக்கொண்ட கடனை மீள செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்கப்பட்டிருந்தது. என்றாலும் எமது அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தை சுட்டிக்காட்டி, கடனை மீள செலுத்த கால அவகாசம் கோரி, எமது நீதிபதிகள் அமெரிக்க நீதிமன்றத்துக்குத் தெரிவித்திருந்தது. அதன் பிரகாரம் எமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு குறித்த வழக்கு விசாரணை 6 மாத காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் மீண்டும் சில தவணைகள் எமக்கு வழங்கப்பட்டன.

இந்த நிலையில் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து, அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாடுகளுக்கு எதிரான கருத்துடையது. அதனால் எமக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றில் வழக்கு தொடுத்திருந்த, எமில்டன் ரிசவ் வங்கி, கடந்த முதலாம் திகதி மீண்டும் வழக்குத் தொடுத்திருந்தது.

அதற்கு இலங்கை அரசாங்கம் அதற்கு பதிலளிக்கும் வகையில் கடந்த 4ஆம் திகதி தனது நிலைப்பாட்டை அறிவித்து அமெரிக்க நீதிமன்றத்துக்கு எழுத்துமூலம் அறிவித்திருக்கிறது. அதில் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தையும் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையையும் ஏற்கனவே இலங்கை அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் முன்னெடுத்துச்செல்வதாக தெரிவித்திருக்கிறது.

ஆனால் எமக்குள்ள பிரச்சினை என்னவென்றால், நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டை மாற்றியமைக்க நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மக்கள் வழங்க வேண்டும் என ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் தெரிவித்து வருகிறது. ஆனால் நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு மற்றும் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக இணக்கப்பாடு ஏற்கனவே எட்டப்பட்டுள்ளது. அவ்வாறு எட்டப்பட்ட இணக்கப்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்து செல்வதாக அரசாங்கம் சர்வதேசத்துக்கும் அமெரிக்க நீதிமன்றத்துக்கும் அறிவித்திருக்கிறது.

இவ்வாறு சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் மக்களிடம் ஒரு கருத்தை தெரிவித்துக்கொண்டு, ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்த வேலைத்திட்டத்தை அவ்வாறே முன்னெடுப்பதாக சர்வதேசத்திடம் தெரிவித்து வருகிறது. அதனால் நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு தொடர்பில் அரசாங்கத்திடம் தெளிவான கொள்கை இல்லை. அதேநேரம் புதிய ஜனாதிபதி ஒருவர் பதிவி ஏற்றால் ஆரம்பமாக அவர் தனது அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையை பாராளுமன்றத்திலோ அல்லது மக்கள் முன்னிலையிலோ முன்வைக்க வேண்டும். ஆனால் அநுரகுமார திஸாநாயக்க இதுவரை அவ்வாறு எதனையும் தெரிவிப்பதை காணவில்லை. – என்றார்.(05)

# ஓய்வுபெற்ற அதிபருடன் ஓரினச் செயற்கையில் ஈடுபட்டு வீடியே எடுத்து கப்பம்கோரிய 21 வயது இளைஞர் கைது

## ஏறாவூரில் சம்பவம்

ஏறாவூரில் ஓய்வு பெற்ற அதிபர் ஒருவருடன் ஓரின சேர்க்கையில் ஈடுபட்ட இளைஞன் ஒருவன் அதனை வீடியோ எடுத்து அவரிடம் அச்சுறுத்தி கப்பமாக 25 ஆயிரம் ரூபா பணம் கோரிய 21 வயது இளைஞன் ஒருவரை சனிக்கிழமை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது பற்றி தெரியவருவதாவது –

குறித்த பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசம் ஒன்றில் உள்ள பாடசாலை ஒன்றில் 2014 ஆம் ஆண்டு அதிபராக கடமையாற்றி வந்தபோது வேறு ஒரு பாடசாலையில் கல்விகற்று வந்த சிறுவன் அங்கு சிறுமிஒருவருடன்ஏற்பட்டதகாதமுறையால்அவரை கைது செய்து பின்னர் அங்கிருந்து குறித்த அதிபரின் பாடசாலைக்கு இடமாற்றப்பட்டு சேர்க்கப்பட்டான்.


இந்த நிலையில் குறித்த சிறுவனுடன் அதிபர் ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டுவந்துள்ள நிலையில் அதிபர் கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் ஓய்வு பெற்றுள்ளதுடன் சிறுவனும் பாடசாலை கல்வியை முடித்து வெளியேறியுள்ள நிலையில் இருவரும் தொடர்ந்து ஓரின சேர்க்கையில் ஈடுபட்டுவந்துள்ளபோது அதனை குறித்த இளைஞன் வீடியோ எடுத்துள்ளான்.

இவ்வாறானநிலையில்குறித்தஇளைஞன்ஓய்வு பெற்ற அதிபரிடம் வீடியோவை; வெளியிடுவேன் 9 லச்சம் ரூபா பணம் தருமாறு கோரிய நிலையில் இளைஞனிடம் பணம் வழங்கியதற்கான கடிதம் ஒன்றை வாங்கி கொண்டு அந்த பணத்தை அதிபர் அவனுக்கு வழங்கியுள்ளார்.

இதன் பின்னர் குறித்த இளைஞன் ஓய்வு பெற்ற 63 வயதுடைய அதிபரிடம் மீண்டும் தனக்கு 5 லச்சம் ரூபா பணம் தருமாறும் அல்லது வீடியோவை வெளியிடப்போவதாக அச்சுறுத்தியுள்ள நிலையில் 25 ஆயிரம் ரூபா மட்டும் தருவேன் என தெரிவித்துவிட்டு தனக்கு நேர்ந்த கதி தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்த நிலையில் பொலிஸாரின் ஆலோசனைக்கமைய குறித்த இளைஞனை வெளியிடம்ஒன்றிற்குஅதிபர்வரவழைத்துபணத்தை வழங்கும் போது அங்கு மாறவேடத்தில் இருந்த பொலிஸார் அந்த இளைஞனை சுற்றிவளைத்து மடக்கி பிடித்து கைது செய்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

இதனையடுத்துகைதுசெய்யப்பட்டஇளைஞனை நீதிமன்றில்ஆஜர்படுத்திநடவடிக்கையைமேற்கொண்டுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# சூரியவெவ பகுதியில் துப்பாக்கி தயாரிக்கும் தொழிற்சாலையை நடத்தி வந்த நபர் கைது



சூரியவெள, வெவேகம பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது துப்பாக்கி தயாரிக்கும் தொழிற்சாலையை நடத்தி வந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாந்தோட்டை விசேட அதிரடிப்படையினரின் முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் சூரியவெள பகுதியைச் சேர்ந்த 33 வயதுடையவராவார்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட ரி - 5 ரக துப்பாக்கி, துப்பாக்கிதயாரிக்கபயன்படுத்தப்படும் பாகங்கள் மற்றும் ஆயுதங்கள் என்பன கைப்பற்றப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபர் சூரியவெள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(05)

# லொகான் ரத்வத்தையின் செயலாளர் சூட்டு காயங்களுடன் சடலமாக மீட்பு

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்தையின் செயலாளர் ஒருவர் துப்பாக்கி சூட்டுகாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கட்டுகஸ்தோட்டையில் உள்ள வீடொன்றில் அவரது உடல் துப்பாக்கி சூட்டுகாயங்களுடன்மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இராஜாங்க அமைச்சரின் வீட்டிற்கு அருகில் இவர் தன்னைதானே சுட்டு உயிரை மாய்த்திருக்கலாம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.(05)

# யாழில் கசிப்புடன் நபரொருவர் கைது



யாழ்ப்பாணத்தில் 10 லீற்றர் சட்டவிரோத மதுபானத்துடன் நபரொருவர்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஊரெழு அம்மன் கோவிலுக்கு அருகில் வீடொன்றில் கசிப்பு விற்பனையில் நபரொருவர் ஈடுபடுவதாகபொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் 10 லீற்றர் கசிப்பை மீட்டதுடன், அதனைவிற்பனைக்கு வைத்திருந்தநபரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# சந்தேகங்களும் கேள்விகளும்

அதிகாரத்தைக் கைப்பற்றியதற்குப் பின்னர் அநுரகுமார திசநாயக்க சிவப்பு ஆடையை அணிவதில்லை என்ற விமர்சனம் முன்னெடுக்கப்படுகின்றது. அது அவரது ஆடையைப் பற்றிய விமர்சனமல்ல. அவரது கொள்கையைப் பற்றிய விமர்சனம். சிவப்பு ஆடை என்பது இடதுசாரி கொள்கைகளின் வெளிப்பாடாகப் பார்க்கப்படுவதால் இந்த விமர்சனம் –முன்வைக்கப்படுகின்றது. அதாவது, பதவியேற்றதற்குப் பின்னர் அநுர, தனது இடதுசாரி அரசியல் கொள்கைகளில் இருந்து விலகி ரணில் விக்கிரமசிங்கவின் முதலாளித்துவக் கொள்கைகளைத் தொடரத் தொடங்கிவிட்டார் என்பதே அந்த விமர்சனத்தின் பொருள்.

அநுர, முற்றிலும் ரணிலின் கொள்கைகளைப் பின்பற்றுகிறார் என்பதை ஏற்கமுடியாது போனாலும் ரணிலின் ஆட்சிப் பாதையில் இருந்து உடனடியாக அவரால் முற்றிலுமாக வெளியேறி, மக்கள் அவசரமாக எதிர்பார்க்கும் மாற்றத்தைக் காட்ட அவரால் முடியவில்லை என்பதையும் ஏற்றுத்தானாக வேண்டியிருக்கின்றது.

அரசுத்தலைவருக்கானதேர்தலில்வாக்குறுதியளித்தபடிவரிகளைக் குறைத்துமக்களின்சுமைகளைஇறக்குவதற்கானவழியில்அநுரவால் கடந்த ஒரு மாத காலத்தில் காத்திரமான அடிகளை எடுத்து வைக்க முடியவில்லை. நாட்டின் பொருளாதார எதிர்காலம் கருதித்தான் இதுபோன்ற விடயங்களில் முடிவுகளையும் நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தாலும், மக்களின் எதிர்பார்ப்பு அவசரம் என்பவற்றைத்தான் தேசிய மக்கள் சக்தியும் கடந்த காலங்களில் தனது அரசியல் மூலதனமாக்கிக்கொண்டதுஎன்பதையும்கவனத்தில்கொண்டாகத்தான் வேண்டும்.

ஆட்சி மாற்றத்தின் மூலம் தமக்கு உடனடியாகக் கிடைத்த நன்மைகள், நிவாரணங்கள் என்ன என்பதுதான் மக்களிடம் உள்ள கேள்வி. கடந்த ஒரு மாத காலத்தில் அதற்கான பதில் எதுவும் இல்லை என்பதுதான். அதனால்தான் ரணிலின் அதே பாதையில் அநுரவும் தொடர்கின்றார், அவரது தனது சிவப்புச் சட்டையைக் களைந்துவிட்டு வெள்ளைச் சட்டையை அணிந்துவிட்டார் என்கிற விமர்சனங்கள் எழுகின்றன.

இதற்கான மிக அண்மைய உதாரணம் மனித உரிமைகள் ஆணைக்குழு எழுப்பியுள்ள கரிசனை. நாட்டில் பொது ஒழுங்கைப் பேணுவதற்காக இராணுவத்தினர், கடற்படையினர் மற்றும் விமானப் படையினருக்கு அழைப்புவிடுக்கும் வகையில், அரசுத் தலைவரால் வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இந்தக் கரிசனையை வெளிப்படுத்தியுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அளவுகோல்களுக்குப் புறம்பாகப் பிறப்பிக்கப்படக்கூடிய இத்தகைய கட்டளைகளால் மனித உரிமைகள் பாதுகாப்பில் எதிர்மறையான தாக்கம் ஏற்படக்கூடும் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12ஆவது பிரிவின் கீழ் 2024 செப்டெம்பர் 26ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட 2403/47ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக முன்னைய ஆளும்தரப்பால் பிறப்பிக்கப்பட்ட இக்கட்டளை மாதாந்தம் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. செப்டெம்பர் 24 முதல் ஒரு மாதகாலத்துக்கு இலங்கையின் ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலும் பொது ஒழுங்கைப் பேணுவதற்காக இலங்கை இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையின் அனைத்து உறுப்பினர்களும் தற்போதைய அரசுத் தலைவர் அநுரவாலும் அழைக்கப்பட்டுள்ளனர்

இதுகுறித்தே தமது கரிசனையை வெளிப்படுத்தியுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரான உயர் நீதிமன்ற நீதியரசர் (ஓய்வுபெற்ற) எல்.ரீ.பி.தெஹிதெனிய அரசுத் தலைவருக்கு அனுப்பிய கடிதத்தில் இது தேவைதானா என்ற கேள்வியை எழுப்பியுள்ளார். இந்த உத்தரவு ரணில் விக்கிரமசிங்கவால் பிறப்பிக்கப்பட்டது. நாட்டின் போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் அடக்கி ஒடுக்குவதற்காக அவரால் எடுக்கப்பட்ட நடவடிக்கை அது. 'அரகலய' போராட்டத்தால் அரண்டுபோயிருந்த ரணில் தனக்கெதிராகவும் அத்தகையதொரு மக்கள் கிளர்ச்சி வெடித்துவிடாமல் இருப்பதற்காக மக்களாட்சி (ஜனநாயக) மாண்பைக் காலில் போட்டு மிதித்துப் பிறப்பித்த உத்தரவு அது.

அதே உத்தரவு தேசிய மக்கள் கட்சியின் ஆட்சியிலும் ஏன் தொடர்கின்றதுஎன்பதேகேள்வி. மாற்றத்துக்காகப்போராட்டங்களையும் கிளர்ச்சிகளையும் வழிநடத்திய தரப்பு அதிகாரத்திற்கு வந்த பின்னர் அத்தகைய மக்கள் வெளிப்பாடுகளை அடக்கி ஒடுக்கும் சட்டங்களை முன்னைய ஆட்சியாளர்களின் பாணியில் தொடர்வது அவர்களின் அரசியல் கொள்கை நிலைப்பாடு தொடர்பான சந்தேகங்களையும் கேள்விகளையும் நிச்சயம் எழுப்பத்தான் செய்யும்.

# அநுரவுக்குப் பதில் சஜித்தை தோற்கடித்தாரா ரணில்?

**உபுல் ஜோசப் பெர்னாண்டோ**

2019 ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட வேட்பாளர் சஜித் பிரேமதாச. அந்தத் தேர்தலில்







அவர் 5,564,239 வாக்குகளைப் பெற்றார், 41.99%. 2024 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற வேட்பாளர் அனுரகுமார. அவர் பெற்றது மொத்தம் 5,740,179 வாக்குகள், 42.31% பெற்றார்.

அப்படியானால், '2019இல் சஜித் தோற்றுப்போன அதே சதவீத வாக்குகளால் அனுரா இம்முறை வென்றார் என்று அர்த்தமா?'

இலங்கை ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் 2010ஆம் ஆண்டைத் தவிர, தோற்கடிக்கப்பட்ட எந்தவொரு வேட்பாளரையும்விட குறைந்த சதவீதத்தில் வெற்றி பெற்றவர் அனுரவே. 1999 முதல் நடந்த ஐந்து ஜனாதிபதித் தேர்தல்களில் தோற்கடிக்கப்பட்ட வேட்பாளர்களின் வாக்கு சதவீதத்தைப் பார்த்தால் இது தெளிவாகும்.

''அனுர ஒரு மில்லியன் வாக்குகளைப்



பெற்றார்'' என்பது 2024 ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னரே ஜேவிபி ஆரம்பித்த பரப்புரை. சமூக ஊடக கருத்துக் கணிப்புகள் அனுர 60% க்கும் அதிகமான வாக்குகளைப் பெறுவார் என்று சுட்டிக்காட்டின. நாடு முழுவதும் அனுரவுக்கு ஆதரவு அலை வீசியதாக கட்சி வேறுபாடுகள் இன்றி அனைவரும் தெரிவித்தனர். 2019இல் கோட்டாபயவுக்கு ஏற்பட்ட அலையைவிட இந்த அலை அதிகமாக இருந்ததாக அரசியல் ஆய்வாளர்கள்கூடக் கூறியுள்ளனர்.

சஜித் வெற்றி பெறுவார் என்று கூறிய அனைவரும் வடக்குகிழக்கு மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் வாக்குகளின் ஆதரவுடன் அவர் வெற்றி பெறுவார் என நம்பினர். எவ்வாறாயினும், சிறுபான்மையினர் வாழும் வடக்கு -கிழக்கு மற்றும் பெருந்தோட்ட மாவட்டங்களில் ரணில் 723,426 வாக்குகளைப் பெற்றுள்ளார் என்பதும், சுயேச்சைத் தமிழ் வேட்பாளர் 226,343 வாக்குகளைப் பெற்றுள்ளார் என்பதும் உண்மை. இவைகளை இணைக்கும் போது மொத்தம் 949,769 வாக்குகள். இது சஜித்தின் வாக்குகளுடன் சேர்ந்தால், அவரது மொத்த வாக்குகள் 5,312,804 ஆகிவிடும்.

சிறுபான்மையினரும்வாழும்கொழும்பு, கண்டி, மாத்தளை போன்ற மாவட்டங்களில் ரணிலின் வாக்குகள் இந்தக்கணக்கீட்டில்சேர்க்கப்படவில்லை. கொழும்பு, கண்டி, மாத்தளை ஆகிய மாவட்டங்களின் சிறுபான்மை வாக்குகளையும் சேர்த்தால் சஜித் வெற்றி பெற்றிருப்பார்.

இங்கு சிங்கள தேசியவாதிகள் வாழும் மாவட்டங்களில் ரணில் பெற்ற வாக்குகள் சஜித்தின் மொத்த வாக்குகளுடன் சேர்க்கப்படவில்லை. ஏனெனில் அந்த வாக்குகளில் பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வாக்குகளும் அடங்கும் என்பதால் அவை சேர்க்கப்படவில்லை. சஜித்தின் மொத்த வாக்குகளில் நுவரெலியா, யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, திகாமடுல்ல (அம்பாறை), திருகோணமலை, புத்தளம் மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் இருந்து மட்டுமே கிடைத்த வாக்குகள் அடக்கம்.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் ஒருவருக்கு பார் லைசென்ஸ் வழங்கி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து சுயேச்சையாகத் தமிழ் வேட்பாளரை நிறுத்தியவர் ரணில்தான். சஜித்தின் வாக்குகளை பிளவுபடுத்தும் நோக்கில், ஜனாதிபதி தேர்தலில் பொன்சேகாவை முன்னிறுத்தியவரும் ரணில்தான்.

**'அப்படியானால், சஜித்தை ரணில் தோற்கடித்தாரா?'**

ஒசி அபேகுணசேகர 1988இல் செய்த ஒப்பந்தத்தைப் போன்றதுதான் ரணில் 2024இல் செய்ததும். 1988 ஜனாதிபதித் தேர்தலில் எஸ்.எல்.எம்.பி. (ஸ்ரீலங்கா மகாஜன பெரமுன) வேட்பாளர் ஒசி அபேகுணசேகரவின் வாக்குகளை சிறீமாவோவின்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# அநுரவுக்குப் பதில் சஜித்தை தோற்கடித்தாரா ரணில்?

4ம் பக்க தொடர்ச்சி..........

மொத்த வாக்குகளுடன் சேர்த்திருந்தால் அவர் வெற்றி பெற்றிருப்பார். ஒஸ்ஸி செய்தது ஐ.தே.க ஒப்பந்தம்.

**இம்முறையும் அனுரவின் ஒப்பந்தத்தை ரணில் நிறைவேற்றினார்.**

2024 ஜனாதிபதித் தேர்தலில் சஜித் எதிர்கொண்டது அனுரகுமாரவை அல்ல, மாறாக 76 ஆண்டுகளாக நாட்டை ஆட்சி செய்த சுதந்திரக் கட்சி (SLFP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP) மற்றும் பொது ஜன பெரமுன (SLPP),2015 மைத்திரி - -ரணில் ஆளும்தரப்பின் அணிகளுக்கு எதிரான ஒரு பொது சுனாமியைத்தான். இந்தப் பொது சுனாமி சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பெரமுன ஆகியவற்றைத் துடைத்தெறிந்தது.

இருப்பினும், அதில் ஐக்கிய மக்கள் சக்தி SJB) அடித்துச் செல்லப்படவில்லை. 60%க்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று அநுராவைத் தெரிவுசெய்ய பொது சுனாமி ஏற்பட்ட போதிலும், சஜித்தால் அதை 42% ஆகக் குறைக்க முடிந்தது. அதுமட்டுமன்றி பெரும்பான்மையின்றிய இலங்கையின் முதல் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேவையை ஏற்படுத்தியது. அநுர 50% பெறுவதை சஜித் தடுத்தார்.

ஜே.வி.பியின் வலுவான சமூக ஊடகப் பரப்புரையால் சூழப்பட்ட நிலையில் சஜித் இந்த விளையாட்டை விளையாடினார். இதேவேளை, தெரண, சிரச, லங்காதீப, ஸ்வர்ணவாஹினி போன்ற பிரதான ஊடகங்கள் அனுரவின் வெற்றிக்கு இரவும் பகலும் உழைத்தன. தேசிய தொலைக்காட்சி மற்றும் சுயாதீன தொலைக்காட்சி போன்ற அரச ஊடகங்களும் சஜித்தை தொடர்ந்து தாக்கும் அதேவேளையில் ரணிலுக்கு ஆதரவளித்தன. தெரண, லங்காதீப, டெய்லி மிரர் ஆகிய பத்திரிக்கைகள் ரணில் மற்றும் அனுர இருவருக்கும் விளம்பரம் கொடுத்து சஜித்தை மூன்றாம் இடத்திற்குத் தள்ளியது. 2019இல் கோட்டாபயவை தெரிவு செய்ய பாம்புகளை காட்டிய தெரண இந்த ஜனாதிபதி தேர்தலில் சஜித்தை தாக்க விவாதங்களை நடத்தியது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ரணிலுக்கு ஜனாதிபதி பதவியை அன்பினால் வழங்கவில்லை, மாறாக ஐதேக தலைவரை நியமித்தது சஜித்தையும் ஐக்கிய மக்கள் சக்தியையும் ஓரங்கட்டவே. அவ்வாறு செய்வதன் மூலம் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன மீண்டும் எழுச்சி பெறும் என ராஜபக்சக்கள் நம்பினர். எனினும், பெரமுன தோற்கடிக்கப்பட்டது,

2001ஆம் ஆண்டு பிரபாகரனின் ஆதரவுடன் ரணில் பிரதமரானார். பிரபாகரன் கொழும்பில் குண்டுவீசியாழ்ப்பாணத்தில் தாக்குதல் நடத்தாமல் இருந்திருந்தால்,சந்திரிகாவின் ஆளும்தரப்பைக் கவிழ்த்திருக்க முடியாது. ரணில் பிரதமரானார், ஆனால் பிரபாகரன் தோற்கடிக்கப்பட்டார்.



2015 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ரணிலைப் பிரதமராக்கியது. 2019இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அழிக்கப்பட்டுசீர்குலைந்தது. 2022இல் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனரணிலை பிரதமராக்கி அதன் பின்னர் ஜனாதிபதியாக்கியது. 2024ல், SLPP இல்லாமல் போனது.

2024ஆம்ஆண்டுஜனாதிபதித்தேர்தலில்தோல்வியடைந்த பின்னர் மீண்டும் ரணிலுடன் சேர்ந்து ஐக்கிய மக்கள் சக்தி பொதுத் தேர்தலை எதிர்கொண்டிருந்தால் அதுவே அந்தக் கட்சியின் முடிவாக இருந்திருக்கும்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே, ரணில், ராஜபக்சக்கள் மற்றும் ஜே.வி.பி. ஆகிய தரப்புக்களின் இலக்காக இருந்து வருகின்றது. கட்சியையும் சஜித்தையும் வீழ்ந்துவதே இவற்றின் நோக்கம். கோட்டாபய வெற்றி பெற்றபோது, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரானடயாளாஆளும்தரப்பில்அமரவைக்கப்பட்டார். ராஜபக்சக்கள் ரணிலை நாடாளுமன்றத்திற்குள் கொண்டு வந்து சஜித்தை எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்க முயற்சித்தனர். அது தோல்வியுற்றபோது, ஐக்கிய மக்கள் சக்தியை உடைக்க உதவுவார் என்ற நம்பிக்கையில் ரணிலை ஜனாதிபதியாக்கினார்கள். இந்த முயற்சிக்கு ஜேவிபியும் கைகொடுத்தது.

ஜனாதிபதித் தேர்தலின் மத்தியில் தலதா அத்துக்கோரள ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பிரிந்து சென்று ரணிலுடன் இணைந்தார். இதுரணிலின்வெற்றிக்குஉதவுவதற்காகஅல்ல மாறாக அனுரவின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காகவே. அநுர முதலாவதாக வருவார் என்றும் தாம் இரண்டாவதா வருவார் என்றும் ரணில் நம்பினார். அது நடக்கவில்லை என்றால், சஜித்தை தோற்கடித்து, அவரை வெளியேற்றி, ஐக்கிய மக்கள் சக்தியை மீண்டும் ஐ.தே.க.வுக்கு அழைத்துச் சென்று, தன்னை மீண்டும் எதிர்க்கட்சித் தலைவராக்குவது ரணிலின் இலக்காக இருந்தது.

இன்று ரணில் வாக்கு கேட்கவில்லை. அவர் தேசியப் பட்டியலில் இல்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் ஆகியோரும் வாக்கு கேட்கவில்லை. ராஜபக்சக்கள் வாக்கு கேட்கவில்லை.

இருப்பினும் சஜித் வாக்கு கேட்கிறார். ஐக்கிய மக்கள் சக்தி நாட்டின் முக்கிய எதிர்க்கட்சியாக உள்ளது. கசப்பாக இருந்தாலும் அதுதான் உண்மை. ஒரு பொதுச் சுனாமியை எதிர்கொண்டபோது ஐக்கிய மக்கள் சக்தியின் எதிரிகள் அதில் அடித்துச் செல்லப்பட்டனர். ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி தப்பிப் பிழைத்தது.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் தேசியக் கூட்டமைப்பை நான்தான் உருவாக்கினேன்

## இப்படிக் கூறுகிறார் கருணா



தமிழ் தேசியக் கூட்டமைப்பை நான்தான் உருவாக்கினேன். தலைவரிடம் விடயத்தை எடுத்துக் கூறி தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று முடிவெடுத்து அதனை உருவாக்கினேன். மட்டக்களப்பில் இருந்து உருவாகிய கருதான் அந்த தமிழ் தேசியகூட்டமைப்புஎனமட்டக்களப்பு மாவட்டத்தில்சுயேட்சையாகபாராளு மன்றத் தேர்தலில் போட்டியிடும் விநாயகமூர்த்திமுரளிதரன்(கருணா அம்மான்) தெரிவித்தார்.

அவரது தேர்தல் அலுவலக மொன்று மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு தேர்தல் தொகுதிக்குட் பட்டமகிழூர்கிராமத்தில்திறந்துவைத் துவிட்டுகருத்துதெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் இதன்போது மேலும் தெரிவிக்கையில் –

கடந்த காலங்களிலே நான் ஒருபோதும் தேசிய கட்சிகளிலும், தேர்தல்களிலும்களமிறங்கவில்லை. அம்பாறைமாவட்டத்திலும்நான்தனி தமிழ் கட்சியிலே தான் தேர்தலில் களமிறங்கி இருந்தேன்.

இம்முறையும் நான் மட்டக்களப்பில் தேசிய ஜனநாயக முன்னணி எனும் தமிழ் கட்சியி லேதான் போட்டியிடுகிறேன். தேசிய கட்சியில் நாங்கள் தேர்தலில் களமிறங்கினால் நிச்சயமாக அதில் மூன்று முஸ்லிம் வேட்பாளர்களை களமிறக்குவார்கள்.

எம்முடைய வாக்குகள் அவர் களைத்தான் வெற்றிபெற வைக்கும். அதனால்தான் நாங்கள் தேசியக் கட்சிகளில் தேர்தலில் களமிறங்கவில்லை. அதனால்தான் இம்முறையும் நாங்கள் எட்டு தமிழ் வேட்பாளர்களோடு மட்டக்களப்பு மாவட்டத்தில் களமிறங்கி இருக்கின் றோம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பை நான்தான் உருவாக்கினேன். தலைவரிடம் விடயத்தை எடுத்துக் கூறி தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கவேண்டும்என்றுமுடிவெ டுத்து அதனை உருவாக்கினேன்.

மட்டக்களப்பில்இருந்துஉருவான கரு தான் அந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு. அதனை தலைவர் ஏற்றுக்கொண்டு கூட்டமைப்பை உருவாக்கினார்.

அக்காலத்தில் யுத்தம் நடை பெற்றபோது எமது மக்களின் இழப்புக்கள், யுத்த அழிவுகள் உலக அரங்குக்கு தெரிய வர வேண்டும். அது நாடாளுமன்றத்தில் பேசப்பட வேண்டும். தமிழர்களின் குரல்கள்நாடாளுமன்றத்தில்ஒலிக்க வேண்டும் என்பதற்காகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

அந்தக் கடமையை ஆரம்பத் தில் அவர்கள் நன்றாக மேற்கொண் டிருந்தார்கள். அதனை நான் வரவேற்கின்றேன். சம்பந்தன் ஐயா இருக்கும்போது அது நன்றாகத்தான் செயற்பட்டது.

அவர் மரணித்ததன் பின்னர் அவர்கள் சிதறுண்டு போய்விட்டார்கள். காலப்போக்கில் அவர்கள் பணத்துக்கு அடிமையாகி பதவிகளுக்கு ஆசைப்பட்டு சிதறிப் போயுள்ளார்கள். இதுதான் தமிழ் தேசியகூட்டமைப்பின்வரலாறாகும்.

வடக்கு கிழக்கிலே இருக்கின்ற தமிழ் மக்களுக்கு ஒரு காத்திரமான தலைமைத்துவத்தை வழங்குவ தற்காக வேண்டி நான் இந்த தேர்தலிலே மட்டக்களப்பு மாவட்டத் தில் போட்டியிடுகிறேன்.

அதனை ஏற்படுத்துவதற்கு என்னால்முடியும். அதற்காகவேதான் நான் வந்திருக்கின்றேன். இதனை விட்டுக்கொடுக்க முடியாது. பணத் துக்கும் இலஞ்சத்துக்கும் இடம்பெற்ற கூடாது. இரண்டு தடவைகள் நான் நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்துள்ளேன்.

அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக வரப் போகின்றார் என்ற போது அனைவரும் நடுங்கிக் கொண்டிருந்தார்கள். நான் மாத்திரம் சிரித்துக்கொண்டே இருந்தேன். ஓர் ஊழல்குற்றச்சாட்டுகளும்எண்ணில் சுமத்த முடியாது. ஒரு மதுபான கடைகுரிய அனுமதிப்பத்திரம் என்னிடம் இல்லை.

மணல் ஏற்றுவதற்கு உரிய அனுமதிப்பத்திரமில்லை. நான்இருந் தபடியே தான் இப்போதும் இருக்கிறேன். களவு செய்தவர்கள் அனைவரும் பயத்திலே திரிகின் றார்கள், பழைய அமைச்சர்கள் கொழும்பிலே ஒளித்துவிட்டார்கள், நானும் கடந்த ஜனாதிபதி தேர்தலில் அனுரகுமார திசாநாயக்கா அவர்களுக்குத்தான்வாக்களிக்குமாறு மக்களிடம் கேட்டிருந்தேன்.

ஊழலை நிறுத்த வேண்டும், ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும், அதன் சூத்திரதாரிகளை கண்டுபிடிக்க வேண்டும், என்பதற்காகவேதான் நான் அவ்வாறு கூறியிருந்தேன். ஏனெனில் ஜனாதிபதியாக சிங்கள நபர் ஒருவர்தான் இந்த நாட்டிலே வரமுடியும் தமிழர் ஒருவரோ இஸ்லாமியர்ஒருவரோவரமுடியாது.

ஆனால் பொதுத்தேர்தல் என்பது வேறாகும் இதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். இதிலே ஜேவிபி எனும் கட்சிக்குப் பின்னால் யாரும் போகக்கூடாது. அவர்கள் இனத் துவேஷம் பிடித்த ஒரு கட்சியாகும் தமிழர்களுக்கு முதலாவது துரோகம் செய்த கட்சி ஜே.வி.பி. ஆகும்.

நீதிமன்றம் சென்று வடக்கு கிழக்கை சட்ட ரீதியாக அவர்கள் பிரித்தார்கள். ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ, மஹிந்த ராஜப க்ஷவோ, ரணில் விக்கிரமசிங்கவோ பிரிக்கவில்லை. பிரித்தவர்கள் ஜே.வி.பியினர். இதனை நாம் மறந்துவிட முடியாது.

சிலர் திசைகாட்டி திசைகாட்டி என வருவார்கள். மட்டக்களப்பு மாவட்டத்திலே திசைகாட்டி சின்னத் திலேயே மூன்று தீவிரமான முஸ்லிம்களும், ஒரு சிங்களவரும், ஏனையவர்கள் மலையகத்தைச் சேர்ந்தவர்களையும் மட்டக்களப்பிலே களமிறக்கியுள்ளார்கள்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பை எடுத்துக்கொண்டால் சங்கு ஒரு பக்கம், மற்றவர்கள் ஒரு பக்கம் உள்ளார்கள். கடந்த ஜனாதிபதி தேர்தலில் அல்லது ஒரு முடிவு எடுத்தார்கள். நானும் அதோடு சத்தமிடாமல் இருந்தேன். அவர் ஜனாதிபதியாக வரமுடியாவிட்டாலும் தமிழர்கள் ஒற்றுமையாகஇருக்கின்றார்கள்என்பதைகாட்டுவதற்காக அவர்கள் வந்தார்கள்.

ஆனால் சுமந்திரனும் சாணக்கியனும் பணத்தைப் பெற்றுக்கொண்டுஓடிவிட்டார்கள். ரணிலிடம்60கோடியை சாணக்கியன் வாங்கிவிட்டு சஜித் பிரேமதாஸவுக்கு வேலை செய்துள்ளார்.

சாணக்கியனும் சுமந்திரனும் எப்போது கட்சிக்குள் வந்தார்களோஅப்போதுஅந்தகட்சிஅழிந்துபோய்விட்டது. இதில் எமது மக்கள் தெளிவாக இருக்க வேண்டும். தேசியம்தேசியம்எனகதைத்து உசுப்பேத்துகின்றார்கள்.

இம்முறை தேசியம் கதைப்பதற்கு வந்தால் கணக்கறிக்கையை மக்கள் கேட்க வேண்டும். கொள்ளையடித்தபணத்துக்குகணக்கைதெரிவித்துவிட்டு தேசியத்தைக் கதையுங்கள் என மக்கள் கூற வேண்டும்.

இதனை நான் கூறவில்லை. ஜனா முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கூறுகின்றார். 60 கோடியை சாணக்கியன் பெற்றதாக ஜனா கூறுகின்றார். ஜனாவை பார்த்து நீ அதிக அளவு சொத்துக்கள் குவித்து வைத்திருக்கிறாய் அந்த சொத்து எங்கிருந்து வந்தது உமக்கு என கேட்கின்றார்.

இன்னும் ஒருவருக்கு 588 கோடி ரூபாவுக்கு உரிய விசாரணை வரவிருக்கிறது. சிங்கப்பூரிலிருந்து அனைத்து இடங்களிலும் வீடு வாங்கியுள்ளார். அதனை மக்கள் பத்திரிகைகளில் பார்த்திருப்பார்கள். இவ்வாறு கொள்ளை அடித்திருந்தால் எவ்வாறு மக்களுக்கு அவர்கள் சேவை செய்வது இந்த நிலையில் மக்கள் நன்றாக முடிவெடுக்க வேண்டும்.

எனது கண்ணுக்கு முன்னரே பல போராளிகள் மடிந்தார்கள். அதனை நான் மறக்கவில்லை. பல போராளிகள்அங்கவீனமாகஇருக்கின்றார்கள். அதையும் நான் மறக்கவில்லை. பல தாய்மார்கள் தற்போதும் கண்ணீர் வடித்துக்கொண்டுதான் இருக்கின்றார்கள்.

இதற்கு எல்லாம் நாம் ஒரு முடிவு கட்ட வேண்டும். இதற்காக வேண்டி அனைத்து போராளிகளும் அணி திரளுங்கள். ஒருவொருவரும், மாற்றுத் திசைகளுக்கு செல்ல வேண்டாம். எனக்கு தான் போராளிகளின் அருமை தெரியும். யாருக்கும் அது பற்றி கதைப்பதற்கு உரிமை இல்லை.

மாவீரர் நாள் அனுஷ்டிப்பது என்றால் அதனை நாங்கள் தான் அனுஷ்டிக்க வேண்டும். வெளிநாடுகளில் ஒளிந்திருந்துவிட்டு வந்தவர்களுக்கு எந்த உணர்வுமில்லை. இனிமேல் அதற்கு அனுமதிக்க முடியாது.

எனவே தமிழர்களின் இருப்பை காப்பாற்றுவதற்கு சிறந்த தலைமைத்துவத்தை வளர்த்துவிட வேண்டும். படித்தவர்கள்எதனையும்சாதிப்பதில்லை. இலங்கையிலே முதலாவது படிப்பு படித்தவர் தான் மதுபான கடை நடத்துகின்றார். நான் மதுபான கடைகளுக்குரிய அனுமதிப்பத்திரம் பெறுவது என்றால் நூற்றுக்கு மேற்பட்ட அனுமதி பத்திரங்களை பெற்றிருக்கலாம். அதெல்லாம் வேண்டாத விடயம்.

தமிழரசு கட்சியில் வைத்தியர் உள்ளிட்ட பலர் போட்டியிடுகிறார்கள். அவர்களுக்கு இருக்கின்ற சொத்துக்களை காப்பாற்றுவதற்காகவே அவர்கள் போட்டியிடுகிறார்கள். மக்களுக்கு சேவை செய்வதற்காக அவர்கள் போட்டியிடவில்லை.

அவர்களுக்கு தமிழர்களின் பிரச்சினையை பற்றி தெரியாது. நான் 22 வருடங்கள் போராடி இருக்கிறேன். எனது சொந்த அண்ணனை கூட நான் இழந்திருக்கின்றேன். அனைவருக்கும் இழப்புக்கள் உள்ளன. தேசியப் பட்டியலில்தான் நான் இரண்டு முறை நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டேன்.

அதனூடாக அதிகளவு வேலைகளை மக்கள் மத்தியில் நான் செய்திருக்கின்றேன். இந்த முறை நாடாளுமன்றத்திற்குமக்களின்ஆணையுடன்தான்செல்ல வேண்டும். அவ்வாறெனில் தான் எதையும் வாதிட்டு பெற்றுக்கொள்ளலாம். நமதுநாடாளுமன்றஉறுப்பினர்கள் அங்கு சென்று எதிரே உள்ள உறுப்பினர்களை குற்றம் சுமத்துவதுதான் அவர்களுடைய வேலை. மாறாக இஸ்லாமிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்கு இடையே யாரையும் குற்றம் சுமத்தி நாடாளுமன்றத்தில் பேசவில்லை.

கடந்த முறை அம்பாறையிலே போட்டியிட்டு 35000 வாக்குகளை அந்த மக்கள் எனக்கு அளித்திருந்தார்கள். மக்களுக்காக நாங்கள் உயிரையும் தருவதற்கு காத்திருக்கின்றோம். அது எனக்கு பெரிய பிரச்சினை இல்லை. கூட்டமைப்புக்கும் சங்கு குழுவுக்கும் மக்கள் முடிவு கட்ட வேண்டும்.

இலஞ்ச ஊழலை நிறுத்த வேண்டும். ஒரு வேட்பாளர் தலா 3 ஆயிரம் ரூபா பணம் கொடுக்கின்றாராம், இன்னும் ஒரு வேட்பாளர் மதுபானம் வழங்கியதாக பொலிஸாரால் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். களவு செய்த காசுகளை அவர்கள் அள்ளி வழங்குகிறார்கள். தேசப்பற்றுடன் சேவை செய்யக்கூடிய தலைவர்களை நாங்கள் வளர்த்துவிட வேண்டும். – என்றார்.(05)

# கடற்றொழிலாளர் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே எமது நோக்கம்

## ஞானப்பிரகாசம் சுலக்சன்




தமிழர்களே தமிழ் கடலினை ஆழ வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். அதற்காக கடற்தொழிலாளர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதே எமது நோக்கமாகும் என ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் யாழ். தேர்தல் மாவட்டத்தின் முதன்மை வேட்பாளர் ஞானப்பிரகாசம் சுலக்சன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குஅனுப்பிவைத்துள்ளசெய்திக்குறிப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

வடக்கு மாகாணத்தில் சுமார் 46 ஆயிரம் கடற்தொழிலாளர்களின் குடும்பங்கள் காணப்படுகின்றன. இன்றைய காலத்தில் அவர்கள் வாழ்வாதாரங்களையும் இழந்து, அவர்களுக்கு இருக்கும் கடல் உரிமையையும் இழந்து நிர்கதியாக நிற்கின்றார்கள். அவர்களுக்கு தீர்வினை நாம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை எடுப்போம்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சுமார் 21ஆயிரத்து 800 கடற்தொழிலாளர்களின் குடும்பங்கள் வசிக்கின்றன. அவர்களின் வாழ்வாதாரங்கள் உயர்த்தப்பட வேண்டும்.

இந்திய இழுவை படகுகள் வடக்கு கடற்தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை நாசமாக்குவதுடன், கடல் வளங்களையும் அழித்துச் செல்கின்றனர். அதற்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுத்து, இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுப்போம்.

சட்ட ரீதியாக தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து அவற்றை முற்றாக தடை செய்வோம்.

அனுமதியின்றி வடக்கு கடற்பரப்பில் தொழில் செய்யும் வெளி மாவட்ட மீனவர்களை அப்புறப்படுத்த விரைந்து நடவடிக்கைளை எடுப்போம்.

கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களை வலுப்படுத்தநடவடிக்கைகளைமுன்னெடுப்போம். அபிவிருத்தி எனும் பெயரில் சிறு தொழில் செய்யும் கடற்தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்காத வகையில் அவர்களுக்கான உதவிகளை வழங்குவோம்.

கடலட்டை பண்ணைகள், இறால் பண்ணைகள் என்பவற்றை மீளாய்வு செய்து முறைப்படுத்த நடவடிக்கை எடுப்போம்.

கரையோரங்களில் இராணுவம் மற்றும் கடற்படையை வசமுள்ள காணிகளை விடுவிக்க நடவடிக்கைகளை எடுத்து அங்கிருந்து இடம்பெயர்ந்த கடற்தொழிலாளர்களை மீள் குடியேற்றி அவர்களின் வாழ்வாதாரங்களை வளப்படுத்த நடவடிக்கை எடுப்போம்.

கடற்தொழிலாளர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த அவர்களுக்கு பயிற்சிகளை வழங்குவது, இறங்குதுறைகளை புனரமைத்து அபிவிருத்திசெய்வது, புதியதொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி, அதற்கான பயிற்சிகளை வழங்குவது தொடர்பில் நடவடிக்கை எடுப்போம்.

தமிழர்களே தமிழ்க் கடலினை ஆழ வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். அதற்காக கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதே எமது நோக்கமாகும். - என்றுள்ளது.(05)

# ஹெரோயினுடன் ஒருவர் எகொட உயனவில் கைது

எகொட உயன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீனவர் ஜெய மாவத்தையில் ஹெரோயின் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் எகொட உயன பொலிஸாரால் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மொரட்டுவ பிரதேசத்தை சேர்ந்த 38 வயதுடையவர் ஆவார்.

கைதான நபரிடமிருந்து 05 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எகொட உயன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# பண்டாரவளையில் வீதி தாழ இறக்கம்







பண்டாரவளை பிதுனுவெள - திக்உல்பத கிரிஓருவ வீதி தாழ் இறங்கியதன் காரணமாக வீதியின் 25 மீற்றர் நிலப்பகுதி உடைந்து சேதமடைந்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தியத்தலாவ பிரதேச பொறியியலாளர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த வீதியூடாக பண்டாரவளை பிதுனுவெளயிலிருந்து திக்உல்பத கிரிஓருவ வரை பயணிகள் போக்குவரத்து பஸ்கள் பயணிக்கின்றன.

இதனால், ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

வீதியின் 25 மீற்றர் நிலப்பகுதி உடைந்து சேதமடைந்துள்ளதால் இந்த பகுதியில் பாதுகாப்பு வேலி அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(05)

# போலி தொலைபேசி அழைப்புகள்மூலம் நிதி மோசடிகள் தொடர்பில் எச்சரிக்கை!

## அலி சப்ரி கூறுகிறார்

போலியானதொலைபேசிஅழைப்புகள்மூலம்நடைபெறும் நிதிமோசடிகள்தொடர்பில்பொதுமக்கள்மிகவும்அவதானமாக இருக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் உள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 9 டிப்போகளில் பணிபுரியும் ஊழியர்கள் இந்த போலியான தொலைபேசி அழைப்புகள் மூலம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான வாகனங்களை புதுப்பிப்பதற்கு 10 ஆயிரம் ரூபாவை உடனடியாக செலுத்த வேண்டும் என கூறி ஏமாற்றி இந்த நிதி மோசடி நடைபெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறான நிதி மோசடிகள் தொடர்பில் பல்வேறு பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நிதி மோசடிக்காக பயன்படுத்தப்பட்ட தொலைபேசி இலக்கங்களைச் சோதனையிட்ட போது அவை இறந்த நபர்கள் பயன்படுத்தியமை அல்லது சுற்றுலாவுக்காக நாட்டுக்கு வருகை தந்தவர்கள் பயன்படுத்தியமை என தெரியவந்துள்ளது.

எனவே, இவ்வாறான போலியான தொலைபேசி அழைப்புகள் தொடர்பில் பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (05)

# டயர் களஞ்சியசாலையில் இரத்தினபுரியில் திருட்டு

## சந்தேகநபர்கள் கைது

இரத்தினபுரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திரிவானகெட்டிய பிரதேசத்தில் உள்ள ரயர் களஞ்சியசாலை ஒன்றிலிருந்து 15 லட்சம் ரூபா பெறுமதியான 169 ரயர்களை திருடிய சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த திருட்டு சம்பவம் கடந்த செப்ரெம்பர் மாதம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த 46 மற்றும் 52 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் இந்த டயர் களஞ்சியசாலையில் பணிபுரிபவர் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இரத்தினபுரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)



## ஜனாதிபதிக்கு....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

டொலர்வரை குறைவடைந்தது. ரூபாவின் பெறுமதி 367 ரூபாயில் இருந்தது. அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை இருந்தது. அதனால் நாட்டில் எரிபொருள், எரிவாயுவுக்கு வரிசை ஏற்பட்டது. 10 மணி நேரம்வரை மின்சார துண்டிப்பு ஏற்பட்டது. அரச ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு முடியாத நிலை ஏற்பட்டது.

இவ்வாறு 2022 முதல் சுருங்கி இருந்த பொருளாதாரத்தை 2023 இரண்டாம் காலாண்டில் இருந்து தொடர்ந்து படிப்படியாக வளர்ச்சியடையச் செய்து 2024ஆம் ஆண்டு இரண்டாம்காலாண்டாகும்போதுபொருளாதார மாற்றத்தை ஏற்படுத்த முடியுமாகி இருந்தது.

இந்நிலையில் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தேர்தல் மேடைகளில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என நாங்கள் நம்புகிறோம். வாக்குறுதிகளை நிறைவேற்றும்போது நாட்டின் பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அதனை மேற்கொள்வார் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

ஏனெனில் சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு மற்றும் தனிப்பட்ட ரீதியில் எமக்கு கடன் வழங்கிய சர்வதேச நிறுவனங்களுடன் நாங்கள் ஏற்படுத்திக்கொண்டுள்ள இணக்கப்பாடுகளை பாதுகாத்துக்கொண்டே இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டி இருக்கிறது.

இந்த வருடம் நாங்கள் எதிர்பார்க்கும் அரச வருமானம் நூற்றுக்கு 13.1 வீதமாகும். அடுத்த வருடமாகும்போது சாதாரண சேவைகளை முன்னெடுத்துச்சென்று, பலமான பொருளாதாரம் ஒன்றை ஏற்படுத்த அரச வருமானத்தை நூற்றுக்கு 15 வீதமாக அதிகரித்துக்கொள்ளவேண்டும்.

இதுதான் சர்வதேச நாணய நிதியத்துடனும் எமக்குகடன்வழங்கியவர்களுடனும்நாங்கள் ஏற்படுத்திக்கொண்டுள்ள இணக்கப்பாடாகும். விசேடமாக கடனை மீள வழங்குவதற்கு முடியுமானஅந்நிய செலாவணி மற்றும் அரச வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டி இருக்கிறது.

யார் ஆளும்தரப்பில் இருந்தாலும் பொருளாதாரநடவடிக்கைகளின்போதுசர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டை அடிப்படையாகக்கொண்டே எந்தவொரு சீர்திருத்தத்தையும் மேற்கொள்ளவேண்டும். அந்த வகையில் தற்போதை ஆளும்தரப்பு மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி இருக்கிறது. அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற, அவர்கள் கடமைப்பட்டுள்ளனர்.

இந்நிலையில்சர்வதேசநாணயநிதியத்தின் இணக்கப்பாடுகளை பாதுகாத்துக்கொண்டே வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டி இருக்கிறது. இது இந்த ஆளும்தரப்பு எதிர்கொண்டுள்ள பெரும் சவாலாகும். அவ்வாறு செயற்படாவிட்டால் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும் ஆபத்து இருக்கிறது.

நாங்கள் கொண்டு சென்ற பொருளாதார திட்டமிடல் நடவடிக்கை மூலம் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடைய இடமிருக்கவில்லை. அதனால் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான எமது ஆளும்தரப்பு முன்னெடுத்துச்சென்ற பொருளாதார திட்டமிடல் நடவடிக்கையை அவ்வாறே தொடர்ந்து கொண்டு செல்வது மிகவும் முக்கியமாகும்.

அதேநேரம் நாணய நிதியம் மற்றும் எமக்கு கடன் வழங்கிய தரப்பினருடன் ஏற்படுத்திக்கொண்டுள்ள இணக்கப்பாடுகளை அவ்வாறே முன்னெடுத்துச் செல்வதாக அநுரகுமார திசநாயக்கவின் ஆளும்தரப்பு சர்வதேசத்துக்கு உறுதியளித்திருக்கிறது. இது மிகவும் முக்கியமாகும் என்றார்.


காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com








# நாடாளுமன்ற தேர்தல்கள் தொடர்பாக யாழில் உத்தியோகபூர்வ செயலமர்வு





நடைபெறவுள்ளநாடாளுமன்றதேர்தல்கள் தொடர்பிலான பாதுகாப்பு முன்னேற்பாடுகள்மற்றும் தேர்தல்கள் குறித்த முறைப்பாடுகளுக்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான உத்தியோகபூர்வ செயலமர்வு சனிக்கிழமை யாழ். மாவட்டசெயலககேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தஉத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம்பிரதீபன்தலைமையில் நடைபெற்றது.



இச்செயலமர்வில் விசேடமாக பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய கலந்து கொண்டுபொலிஸ்உத்தியோகத்தர்களுக்கான மேலதிக அறிவுறுத்தல்களை வழங்கினார்.

இச்செயலமர்வில் சிரேஷ்ட வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர்ரி.சி.ஏ. தனபால, பிரதிப் பொலிஸ்மா அதிபர் றுவான் குணசேகர, பிரதிப் பொலிஸ்மா அதிபர் (கிளிநொச்சி) சமந்த டி. சில்வா, மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறிமோகனன், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி. எல்.ஏ. சூர்யபண்டார, பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். சந்தன ஹமகே, உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், முறைப்பாட்டுமுகாமைத்துவப்பிரிவின் உதவித்தெரிவத்தாட்சிஅலுவலர்உட்பட சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டார்கள்.

இந்தக்கலந்துரையாடல்ஜனாதிபதி தேர்தல்கள் தொடர்பான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் மற்றும் தேர்தல்கள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டு ஆராயப்பட்டன.(05)

# முன்னைய அரசின் வாடகை வருமானவரி திட்டத்தைக் கைவிடுவதற்குத் தீர்மானம்

## திறைசேரி அதிகாரி தகவல்

முன்னைய அரசாங்கம் முன்மொழிந்த வாடகை வருமான வரி திட்டத்தை கைவிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என திறைசேரியின் பிரதிசெயலாளர் ஆர்எம்பி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் முன்மொழிந்த வாடகை வருமானவரிதிட்டத்தைமாற்றீடுசெய்வதற்காக புதிய யோசனைகள் குறித்து ஆராய்ந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

முன்னையஅரசாங்கத்தின்யோசனையை தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்காது என அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின் அடுத்த மதிப்பாய்வில் சமர்ப்பிப்பதற்காக அரசாங்கம் பல மாற்றுயோசனைகளை ஆராய்ந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்கம் முன்மொழிந்த வாடகைவருமானவரிதிட்டத்திற்குபதில்திறைசேரி அதிகாரிகள் பல மாற்றுயோசனைகளை ஆராய்ந்து வருகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம்புதியதிட்டங்களைமுன்வைக்க வேண்டும் என சர்வதேச நாணயநிதியம் எதிஜுர்பாப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின் அடுத்த-மூன்றாவது மதிப்பாய்விற்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (05)

# விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி பரிதாபச் சாவு!

மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி சனிக்கிழமை மாலை உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் வேரவில் - பூநகரி பகுதியைச் சேர்ந்த 45 வயதுடையவர் என்பதோடு, அவர் மூன்று பிள்ளைகளின் தந்தையும் ஆவார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில் -

கடந்த 11ஆம் திகதி இந்த நபர் வேரவில் பகுதியில் இருந்து முழங்காவில் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தார்.

இதன்போது முழங்காவில் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள மஞ்சள் கோட்டின் ஊடாக வலது பக்கம் திருப்ப முற்பட்ட வேளை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதி படுகாயமடைந்தார்.

இந்நிலையில், முழங்காவில் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு, அங்கிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

பின்னர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது உடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.(05)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர் Kalaikkathir

# மீன்பிடி துறைமுகத்தில் நிறுத்தியிருந்த இரண்டு படகுகள் தீயில் எரிந்து நாசம்



குடாவெல்ல மீன்பிடி துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு மீன்பிடி படகுகள் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளன என தங்காலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்து நேற்று (திங்கட்கிழமை) காலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தீ விபத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஏனைய மீன்பிடி படகுகளில் தீ பரவாமல் இருப்பதற்கு அங்கிருந்த மீனவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீப்பற்றி எரிந்த இரண்டு மீன்பிடி படகுகளும் குடாவெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த ஜயந்த ஜயவெல்ல என்பவருக்குச் சொந்தமானது என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தங்காலை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# மாணவியின் சடலம் ஆற்றிலிருந்து மீட்பு

மஹியங்கனை லொக்கல் ஓயா ஆற்றிலிருந்து நேற்று (திங்கட்கிழமை) மாணவி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

17 வயதுடைய மாணவி ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

சடலமாக மீட்கப்பட்ட மாணவி மற்றுமொரு மாணவியுடன் இணைந்து பதுளை நகரில் உள்ள மேலதிக வகுப்புகளுக்குச் செல்வதாகக் கூறி, வீட்டை விட்டு வெளியே சென்றுள்ளார்.

வெளியே சென்ற மாணவிகள் இருவரும் மீண்டும் வீடு திரும்பாததால் மாணவியின் பெற்றோர் இது தொடர்பில் பதுளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

இந்நிலையில், சடலமாக மீட்கப்பட்ட மாணவியுடன் சென்ற மற்றைய மாணவி வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது மோதியுள்ள நிலையில் மோட்டார் சைக்கிள் செலுத்துனர் மாணவியை ரிதிமாலியத்த பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

இந்த மாணவி தற்போது ரிதிமாலியத்த பொலிஸாரின் கட்டுப்பாட்டில் இருப்பதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(05)

# ஹெரோயினுடன் ஒருவர் பொரளையில் கைது

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சரணபால தேர மாவத்தையில் ஹெரோயின் வைத்திருந்த இளைஞர் சனிக்கிழமை பொரளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளான்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரிகள் குழு மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது இந்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 20 கிராம் 860 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

பொரளை பிரதேசத்தை சேர்ந்த 18 வயதுடைய இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# ஹெரோயினுடன் இருவர் கல்கிசையில் கைதாகினர்

கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்மலான பிரதேசத்தில் ஹெரோயின் வைத்திருந்த சந்தேக நபர்கள் இருவர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் 38 மற்றும் 42 வயதுடைய இரத்மலானையைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 11 கிராம் மற்றும் 12 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.10.2024இல் வெளியிடப்பெற்றது